

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.3.2024) கொளத்தூரில் புதிதாக கட்டப்பட்டுள்ள மேயர் சிட்டிபாபு மேம்பாலப் பூங்காவை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர்.கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.3.2024) கொளத்தூர், முத்து குமாரப்பா சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் பயின்ற மாணவ, மாணவியருக்கு தையல் இயந்திரங்கள் மற்றும் மடிக்கணினிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர், கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ. வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் தலைமை நிர்வாக அதிகாரிகள் நரேந்திரன் மற்றும் திருமதி. ஹெலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டின் விடியல் ஒளி

# இந்தியா முழுவதும் பரவிட - வரும் தேர்தலில் நல்ல முடிவெடுப்பீர்!

## கொளத்தூர் அனிதா அச்சீவர்ஸ் அகாடமி விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, மார்ச் 9 –**

**தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள விடியல் ஒளியை இந்தியா முழுவதும் பரவிட – வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நல்ல முடிவெடுப்பீர் என்று கொளத்தூர் அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் நடைபெற்ற விழாவில் உரையாற்றுகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.3.2024) சென்னை, கொளத்தூரில் அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆற்றிய உரை வருமாறு:**

அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் சார்பில் நடைபெறக்கூடிய நிகழ்ச்சிக்கு வருவதாக இருந்தால் எனக்குத் தனி மகிழ்ச்சி வந்துவிடும். ஏனென்றால், எல்லோருக்கும் தெரியும். என் மனதுக்கு நெருக்கமாக விளங்கும் 'நான் முதல்வன்' திட்டத்திற்கு அடித்தளமாக அமைந்ததே இந்த அனிதா அச்சீவர்ஸ் அகாடமிதான்.

கடந்த 2019-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இந்த அகாடமியை நாம் தொடங்கினோம். இதுவரைக்கும் பத்து பேட்ச் பெண்கள், ஆறு பேட்ச் ஆண்கள் இங்கே பயிற்சி முடித்து, வேலைகளுக்குப் போயிருக்கிறார்கள். இவர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு என்றால், 816 பெண்கள் - 444 ஆண்கள் என்று மொத்தம் 1260 பேர் இந்த அனிதா அச்சீவர்ஸ் அகாடமியால் நல்ல வேலைகளுக்குப் போயிருக்கிறார்கள்.

இப்போது பெண்களுக்கான பதினொன்றாவது பேட்சில் 78 மாணவிகளும் - ஆண்களுக்கான ஏழாவது பேட்சில் 49 மாணவர்களும் - டெய்லரிங் ஏழாவது பேட்சில் 355 மகளிரும் என்று மொத்தம் 482 பேர் பயிற்சி முடித்திருக்கிறார்கள்.

அடுத்து, பெண்களுக்கான பன்னிரண்டாவது பேட்சில் 80 மாணவிகளும் – ஆண்களுக்கான எட்டாவது பேட்சில் 50 மாணவர்களும், டெய்லரிங் எட்டாவது பேட்சில் 360 பெண்களும் பயிற்சி பெற இருக்கிறார்கள். இப்படி உங்களுக்கான மடிக்கணினியும், சான்றிதழும் வழங்க மட்டும் இன்றைக்கு நான் வரவில்லை. பல கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப் பணிகளை தொடங்கி வைக்கவும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவதற்குதான் நான் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறேன். இதற்குப் பிறகும், திட்டங்களை தொடங்கி வைக்க இருக்கிறேன்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.3.2024) கொளத்தூர், பேப்பர் மில்ஸ் சாலையில் உள்ள உழவர் சந்தை பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நீர்வள ஆதாரத் துறை, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித் துறை ஆகிய துறைகளின் சார்பில் 26.86 கோடி ரூபாய் செலவில் முடிவற்ற 2 திட்டப்பணிகளை திறந்து வைத்து, 178.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 7 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு. நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னாக, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர்.கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ.வெற்றியழகள், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் இயக்குநர் பி. கணேசன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாடல் தொகுதியாக கொளத்தூர் தொகுதி!

இப்படி பார்த்து, பார்த்து, அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்துகின்ற திட்டங்களை நிறைவேற்றி, நம்முடைய கொளத்தூர் தொகுதியை மற்ற தொகுதிகளுக்கெல்லாம், அதாவது இங்கே இருக்கக் கூடிய அமைச்சர்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டாக இதை ஒரு மாடல் தொகுதியாக நினைத்துக் கொண்டு நீங்கள் செய்து காட்ட வேண்டும் என்பதற்காக தான் அவர்களை எல்லாம் நான் அழைத்துக் கொண்டு வந்திருக்கிறேன்.

அதேபோல, கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, கண் சிகிச்சை மையம் மூலமாக 750 பேருக்கு கண்ணாடி வழங்குவது, 250 மாணவர்களுக்குக் கல்விக் கட்டணத் தொகை வழங்குவது என்று ஏராளமான நலத்திட்ட உதவிகளை வழங்குவதற்காகவும் வந்திருக்கிறேன். இவையெல்லாம் கலைஞர் நூற்றாண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தாலும், கழகத்தின் சார்பில் செய்யப்படுகிறது.

ஒவ்வொரு முறையும் இங்கே வருகிறபோது, அருமை தங்கை அனிதாவின் தியாகத்தைப் பற்றி நான் அடிக்கடி சொல்வதுண்டு. ஏனென்றால், ஒடுக்கப்பட்ட சமுதாயங்களில் இருந்து முன்னேறி வருகின்ற நம்மை போன்றவர்களுக்கு சமூகத்தில் ஏகப்பட்ட தடைகள் பல வரும். அந்த தடைகளை நியாயப்படுத்தவும் பல பேர் இருப்பார்கள். படித்து முன்னேற ஆசைப்பட்டதே தவறு என்பது போலவும், சிலர் புலம்பிக் கொண்டு இருப்பார்கள், பேசிக் கொண்டு இருப்பார்கள். இதையெல்லாம் கடந்துதான் நாம் முன்னேறியாக வேண்டும்.

### அனைவருக்கும் என் மகளிர் தின வாழ்த்துகள்!

நாளை மார்ச் 8 மகளிர் நாள்! முதலில் உங்களுக்கெல்லாம் என்னுடைய மகளிர் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு குடும்பத்தின் முன்னேற்றத்திற்கும் ஆதரவாக இருப்பவர்கள் பெண்கள். நீங்கள் தான். அப்படிப்பட்ட பெண்கள் சமுதாயத்தில் முன்னேற்றம் அடைய ஊக்கம் அளிக்கின்ற நாள். அதைத் தான் மகளிர் நாளாக நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட அந்த நாளுக்கு முன்னாடி இத்தனை சகோதரிகள் இங்கே பயனடைவதை பார்க்கின்றபோது உள்ளபடியே எனக்கு பெருமையாக இருக்கிறது, மகிழ்ச்சியாகவும் இருக்கிறது.

நம்முடைய திராவிட மாடல் அரசு என்பது மகளிர் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை தீட்டி, பல சாதனைகளை தொடர்ந்து புரிந்து கொண்டிருக்கிறது.

நேரத்தின் அருமை கருதி ஒருசில முத்தாய்ப்பான திட்டங்களை மட்டும் இங்கே நான் பட்டியலிட விரும்புகிறேன்...

- கட்டணமில்லா 'விடியல் பயணம்' திட்டம்
- அரசுப் பள்ளிகளில் படித்து கல்லூரிகளுக்குப் போகின்ற மாணவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்குகிற 'புதுமைப்பெண் திட்டம்'
- குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்'
- தோழி விடுதி – வெளியூரிலிருந்து சென்னைக்கு வந்து வேலை பார்த்துக் கொண்டிருப்பவர்கள் ஏதாவது தனியார் விடுதிகளில் வாடகை கொடுத்து தங்கியிருந்தார்கள். அவர்களுக்கென்று ஒரு பாதுகாப்பாக தோழி விடுதி என்று ஒன்றை கட்டி, இன்றைக்கு மாவட்டம் முழுவதும் கட்டிக்கொண்டிருக்கிறோம்.

### திராவிட மாடல் அரசுக்கும் எனக்கும் பெருமை!

இப்படி ஏராளமான திட்டங்களை நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்படுத்திக் கொண்டு வருகிறது.

இந்த திட்டங்களால் நீங்களும், தமிழ்நாடும் முன்னேற்றம் அடைவதுதான் திராவிட மாடல் அரசுக்கும், இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுக்கும் பெருமை! இப்படி தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளமாக இருக்கக்கூடிய பல திட்டங்களை நாம் எவ்வளவோ செய்து கொண்டிருந்தாலும், ஆனால் அதே நேரத்தில் ஒன்றிய அரசின் ஒத்துழைப்போ, நிதி உதவியோ இல்லாமல் தான் நாம் செய்து கொண்டு வருகிறோம். தமிழ்நாட்டை வஞ்சிக்காத மாநிலங்களை மதிக்கின்ற ஒன்றிய அரசு அமைந்தால் இன்னும் நிறைய செய்ய முடியும். அதற்கான காலம் கனிந்து கொண்டு இருக்கிறது. அதற்கு உங்கள் எல்லோருடைய ஆதரவும் தேவை; தயாராகிவிட்டீர்களா!

நம்முடைய திராவிட மாடல் அரசின் திட்டங்களை உங்கள் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் என்று எல்லோருக்கும் எடுத்துச் சொல்லுங்கள்! தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற விடியலின் ஒளியை இந்தியா முழுவதும் பரவிட வேண்டும் என்றால், வரக்கூடிய நாடாளுமன்றத் தேர்தலில் நீங்கள் அனைவரும் நல்ல முடிவெடுக்க வேண்டும். அதுவும் கொளத்தூர் தொகுதியில் நான் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. இது கொளத்தூர் தொகுதி. என்னுடைய சட்டமன்ற தொகுதி, மன்னிக்க வேண்டும் நம்முடைய சட்டமன்ற தொகுதி. அப்படிப்பட்ட தொகுதியில் உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

மீண்டும் மகளிர் அத்தனை பேருக்கும் என்னுடைய மகளிர் தின வாழ்த்துகளை தெரிவித்து நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



சென்னை, ராஜா அண்ணாமலைபுரம், முத்தமிழ்ப் பேரவை. டி. என். ராஜரத்தினம் கலையரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆகியோர் 2015 ஆம் ஆண்டிற்கான சிறந்த படங்கள், சிறந்த நடிகர் நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கான விருதுகள் மற்றும் தங்க பதக்கங்களை விருதாளர்களுக்கு வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில், சட்டமன்றஉறுப்பினர் த.வேலு, துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், அரையப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேற்று முன்தினம் (07.03.2024) வழங்கினார். உடன் அறந்தாங்கி மாவட்ட கல்வி அலுவலர் திருமதி.ராஜேஸ்வரி, திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.வள்ளியம்மை தங்கமணி, அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.